**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ம் நாள் செவ்வாய்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 02-ம் நாள்)**

**இ.ம.எண்.7/2025 in அசல் வழக்கு எண்.8/2017**

வேட்டுவ கவுண்டர் சமுதாய மடம், கோவில்புதூர்

அதன் சார்பாக தலைமை பொருப்பாளர்,

1. V.S.அமரன் (இறப்பு)
2. A.அகிலேஷ் ..... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1. T.கோபாலகிருஷ்ணன், பரம்பரை அறங்காவலர்
   அருள்மிகு கரிவரதராஜ பெருமாள் வேணுகோபாலசுவாமி
   கோவில், கோவில்புதூர்
2. M.கனகராஜன்
3. P.T.நடராஜன் (இறப்பு)
4. P.K.ராஜேந்திரன்
5. செயல் அலுவலர்,
   அருள்மிகு கரிவரதராஜ பெருமாள், வேணுகோபாலசுவாமி
   கோவில், கோவில்புதூர்
6. N.கவிதா
7. வினோதினி
8. நிவேதா ..... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 10.11.2025-ம் தேதியன்று இறுதியாக என் முன்னிலையில் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.A.முகமதுமுபாரக் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.K.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 2, 4, 6, 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.A.K.மதியழகன் அவர்கள் ஆஜராகியும், 3-ம் எதிர்மனுதாரர்

காலம்சென்றுவிட்டதாலும், மனுதாரர்கள் மற்றும் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு இருந்துவந்து இன்று கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 10 மற்றும் பிரிவு 151 ன் படி, 1-ம் மனுதாரரின் வாரிசாக 2-ம் மனுதாரரை அசல் வழக்கில் 2-ம் வாதியாக கட்சி சேர்க்க உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**:-

அசல் வழக்கானது மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / இந்து வேட்டுவகவுண்டர்கள் சமுதாய மடத்தின் பரம்பரை அறங்காவலரான அமரன் என்பவர் கடந்த 30.07.2025-ல் காலம்சென்றுவிட்டார். மேற்படி, காலம்சென்ற அமரனின் மனைவி கவிதா மற்றும் அவரது மகனான 2-ம் மனுதாரர் அகிலேஷ், பிரசாந்த் ஆகியோர்கள் அமரன் என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி மடத்தின் அறங்காவலராக 2-ம் மனுதாரரை நியமிக்கக் கோரி, அமரனின் மற்ற வாரிசுகளான மனைவி கவிதா, மகன் பிரசாத் ஆகியோர்கள் ஆட்சேபணை இல்லை என பிரமாணப் பத்திரத்தினை தாக்கல் செய்துள்ளனர். எனவே, வாதி மடத்தின் பரம்பரை அறங்காவலரான மனுதாரரின் தந்தை காலம்சென்ற பிறகு அவரின் இடத்தில் வழக்கை நடத்த மனுதாரரை வாதியாக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

**2. 1-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**:-

மனுதாரரின் மனு மோசடியானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்தானது கரிவரதராஜ சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்காக இந்துசமய அறநிலையத்துறையால் கட்டப்பட்டுள்ள கட்டிடம் ஆகும். தாவா சொத்தில் வாதியோ, அவரது முன்னோர்களோ அறங்காவலராக இருந்தது இல்லை. தாவா சொத்தானது கரிவரதராஜர் கோவிலின் அங்கமான மடமாகும். மேற்படி, கோவிலுக்கு 1-ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் 3 தலைமுறையாக பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார்கள். அதன் அங்கமான மடத்திற்கும் 1-ம் எதிர்மனுதாரர் பரம்பரை அறங்காவலர் ஆவார். இந்நிலையில், மனுதாரரின் தந்தை தன்னைத் தானே தாவா சொத்தின் அறங்காவலர் என வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் காலம் சென்ற பிறகு மனுதாரர், அவரது தாயாரிடமும், சகோதரரிடமும் ஆட்சேபணை கடிதம் பெற்று, வழக்கை நடத்த எவ்வித உரிமையும்

இல்லை. எனவே, பொய்யான சங்கதிகளைக் கொண்டு தாக்கல் செய்துள்ள மனுவானது, எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>5. தீர்வு</u>

**5.1** இம்மனுவானது மனுதாரர் / இந்து வேட்டுவகவுண்டர்கள் சமுதாய மடத்தின் பரம்பரை அறங்காவலரான அமரன் என்பவர் கடந்த 30.07.2025-ல் காலம்சென்று விட்டதால், அவரது மகனான மனுதாரரை மேற்படி மடத்தின் அறங்காவலர் எனவும், அமரனின் மற்ற வாரிசுகளான மனைவி கவிதா, மகன் பிரசாத் ஆகியோர்கள் மனுதாரரை மடத்தின் அறங்காவலராக நியமிக்க ஆட்சேபணை இல்லை என பிரமாணப் பத்திரத்தினை தாக்கல் செய்துள்ளனர் எனவும். எனவே, வாதி மடத்தின் பரம்பரை அறங்காவலரான மனுதாரரின் தந்தை காலம்சென்ற பிறகு அவரின் இடத்தில் வழக்கை நடத்த மனுதாரரை வாதியாக சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதம் செய்யப்பட்டுள்ளது.மேலும், மனுதாரர் தரப்பில் அவரது தாயார் கவிதா, சகோதரர் பிரசாத் ஆகியோர்கள் கொடுத்த ஆட்சேபணை பத்திரம் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2** 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்தானது கரிவரதராஜ சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்காக இந்துசமய அறநிலையத்துறையால் கட்டப்பட்டுள்ள கட்டிடம் ஆகும். தாவா சொத்தில் வாதியோ, அவரது முன்னோர்களோ அறங்காவலராக இருந்தது இல்லை என்றும், தாவா சொத்தானது கரிவரதராஜர் கோவிலின் அங்கமான மடம் என்றும், மேற்படி, கோவிலுக்கு 1-ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் 3 தலைமுறையாக பரம்பரை அறங்காவலராக இருந்து வருகிறார்கள் எனவும், அதன் அங்கமான மடத்திற்கும் 1-ம் எதிர்மனுதாரர் பரம்பரை அறங்காவலர் ஆவார். இந்நிலையில், மனுதாரரின் தந்தை தன்னைத் தானே தாவா சொத்தின் அறங்காவலர் என வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் காலம் சென்ற பிறகு மனுதாரர், அவரது தாயாரிடமும், சகோதரரிடமும் ஆட்சேபணை கடிதம் பெற்று, வழக்கை நடத்த எவ்வித உரிமையும் இல்லை. எனவே, மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

**5.3** அசல் வழக்கானது தாவா சொத்தின் மனுதாரரால் கட்டப்படும் கூடுதல் கட்டிடத்தை எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு தற்போது 1-ம் பிரதிவாதி தரப்பில் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. வாதி வழக்கில் அறங்காவலரான அமரன் கடந்த 30.07.2025-ம் தேதியன்று காலம் சென்றுவிட்டதால், அவரது சட்டப்படியான பிரதிநிதியை தரப்பினராக சேர்க்கக் கோரி வழக்கு நிலுவையில் உள்ளது.

**5.4** தற்போது காலம் சென்ற வாதி அமரனின் மகனான மனுதாரர், அவரது தாயார் மற்றும் சகோதரர் ஆகியோரிடம் ஆட்சேபணை இல்லை என பிரமாண வாக்குமூலம் பெற்று, காலம் சென்ற அமரனின் சட்டப் பூர்வமான வாரிசு என்ற முறையில், வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதி கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**5.5** எதிர்மனுதாரர் தரப்பில், தாவா சொத்தான மடம் கரிவரதராஜர் கோவிலின் ஒரு அங்கம் எனவும், அக்கோவில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், வாதிக்கோ அவரது சட்டப்பூர்வமான வாரிசுகளுக்கோ தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை எனவும், எனவே அசல் வழக்கை தொடர்ந்து நடத்த மனுதாரரை அனுமதிக்க எவ்வித முகாந்திரமும் இல்லை என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. 5-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை இல்லை என மேற்குறிப்பு செய்துள்ளனர்.

**5.6** அசல் வழக்கு காலம்சென்ற வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரது தரப்பில் சாட்சி முன்னிலைப்படுத்தப்பட்டு விசாரணை முடிந்து, 1-ம் பிரதிவாதி தரப்பில் விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. தற்போது தாவா சொத்து இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்டதா ? அல்லது வாதியின் குடும்பத்தார் அறங்காவலராக உள்ளனரா ? என்பதை தற்போது தீர்மாணிக்க இயலாது. மேற்படி, உண்மைத் தன்மை குறித்து அசல் வழக்கில் மட்டுமே தீர்வு காணமுடியும். மேலும், அசல் வழக்கை தொடர்நது நடத்த மனதாரர் தரப்பில் காலம் சென்ற அமரனின் பிரதிநிதியாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதை அனுமதித்து வழக்கை தொடர்ந்து நடத்த அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். மேலும் 1-ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரரின் உரிமையைப் பொறுத்து, ஆட்சேபணை செய்ய அசல் வழக்கில் வாய்ப்பு வழங்கப்பட்டு இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

**6. முடிவில் மனுவானது செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.18 10:34:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**இருதரப்பிலும் சாட்சி சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.**

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.18 10:34:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

FAIR ORDER

I.A.7 / 2025

O.S.8 / 2017

18 / 11 / 2025